60

## விநோபா வாணி – 1

# பூ-தான உதயம்.

MADRAS



பிரார்த்தனையில் விநோபா

பிரசுராலயம், தஞ்சாவூர்.

விலை ஒரு அணா.

YZ ஃM95
N56
78092

பூதானப் பிரசுரம் நெ. T 42/1,43,000.

ஆச்சார்ய விநோபா சென்ற நான்கு வருஷங்களாக கால்நடை யாத்திரை செய்து வருகிறார். இதன்மூலம் ஓர் புதிய முறையில் அஹிம்சா புரட்சி ஏற்பட்டு வருகிறது. இவருடைய பிரசங்கங்களில் சிலமட்டுமே மாதப் பத்திரிக்கை சர்வோதயத்திலும், வாரப் பத்திரிக்கை கிராமோதயத்திலும் வெளியிட முடிகிறது.

பூதான — சர்வோதயச் செய்தியை விநோபாஜியின் வார்த்தைகள் மூலம் மக்கள் படித்து அறிந்துகொள்ள விரும்புவார்கள். விநோபாஜியின் முக்கியமான சில பிரசங்கங்களைச் சிறு பிரசுரங்களாக மலிவான விலையில் வெளியிடுவது அவசியமாகிறது. இதற்காகவே "**விநோபா வாணி**" என்ற வரிசையில் விநோபாஜியின் பிரசங்கங்கள் வெளியிடப்படும்.

ஆகஸ்டு மாதம் ஆந்திராவில் 3 தினங்கள் யாத்திரை செய்து ஒரிஸ்ஸாவிற்குத் திரும்பினார். ஆந்திராவில் செய்த மூன்று பிரசங்கங்கள் மிக முக்கியமானவை. இது தமிழ் நாட்டினருக்குப் பேசியதாகக் கொள்ளக்கூடியவை. இந்தத் தொடரில் இவைகளில் முதலாவதைப் பிரசுரிக்கிறோம்.

தஞ்சாவூர்,
12—12—55

**சர்வோதய பிரசுராலயம்,**
*அகில பாரத சர்வ சேவா சங்கம்.*

45

YZ w MS
N53

# பூதான உதயம்.

(வினோபாஜி ஆந்திராவில் பார்வதிபுரத்தில் 8—8—'55-ல் பேசியது.)

## பூதான உதயம்

பூதான யக்ஞத்தைப்பற்றி பாரத மக்களுக்கு உள்ள உற்சாகம் வேறு எதிலும் இல்லையென்று நமக்குத் தெரிந்ததே. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் இவ்வியக்கத்தின் முன்னேற்றத்தைக் கவனித்து வருகிறார்கள். செய்தித்தாள்களோ ரயிலோ போகாத நாட்டின் பகுதிகளில் கூட இவ்வியக்கச் செய்தியைக் கேட்பதற்கு மக்களுக்கு மிகுந்த உற்சாகம் இருந்து வருவதை நான் கண்டிருக்கிறேன். கோராபுட்டைச் சேர்ந்த ஒரு கிராமக் கூட்டத்தில் பேசுகையில் நான் ரயில்வே டிக்கெட் ஆபீஸை ஒரு உதாரணமாகச் சொல்லத் தொடங்கியதும் எனக்கு, இவர்கள் ஒருக்கால் டிக்கெட் ஆபீசையோ ரயிலையோ பார்த்தேயிருக்க மாட்டார்களோ என்ற ஐயம் பிறந்தது. பிறகு விசாரித்ததில் ஆயிரம் பேர் இருந்த கூட்டத்தில் 13 பேரே ரயில் பார்த்திருந்தவர்கள் என்று தெரியவந்தது. எனவே மிகவும் பிற்பட்டுள்ள பகுதிகளில் கூட பூமிதானச் செய்தி பரவிவிட்டது. அதைப்பற்றித் தெரிந்துகொள்ள மக்கள் மிகுந்த உற்சாகம் கொண்டுள்ளார்கள்.

ஆந்திர நாட்டிலும் உற்சாகத்திற்குக் குறைவில்லை என்பதைக் காண்பீர்கள். நான்காண்டுகளுக்கு முன் தெலிங்கானாவில் இது தொடங்கியபொழுது எனக்கே ஒரு புதிய இயக்கம் தோன்றிக்கொண்டிருப்பது தெரியாது. சின்னஞ்சிறு கிராமமொன்றில் நான் நிலம் கேட்கவே ஒரு மனிதர் எழுந்து நிலமளித்தார். ஆகவே என் மனதில் ஒரு கருத்து எழுந்தது. அன்றிரவு எனக்கு விரைவில் தூக்கம் வரவில்லை;

78052

ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்துபோனேன். ஹரிஜனங்கள் என்னிடம் 80 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்க, நான் அக்கோரிக்கையை கிராம மக்களுக்குத் தெரிவித்தேன். எனக்கு 100 ஏக்கர் தானம் கிடைத்தது. அன்றிரவு இன்றைய நிகழ்ச்சிக்குப் பொருளேதேனுமுண்டா, இது ஒரு அசாதாரண நிகழ்ச்சி என்பதோடு சரியா என்று எண்ணலானேன். உலகில் மனிதன் தன் சொந்த எண்ணம்கொண்டே காரியம் செய்வதில்லை; அவனுக்காகக் கருத்துக்கள் சித்தமாகி வருகின்றன; அப்பொழுதே அவனும் அதை ஏற்கிறான் என்பது எனக்குத் தெரிந்திருந்ததுதான். நான் அன்று இந்த கிராமத்தில் தானமளித்தவர் உலகின் மனோநிலைக்கு ஒரு அறிகுறி; ஏதோ ஒரு புதிய கருத்து உலகில் பக்குவம் பெற்று வருகிறது என்று ஊகித்தேன். அந்த கிராமத்தில் நிலமில்லாதவர்கள் செய்துகொண்ட கோரிக்கையைப்போன்றே ஒவ்வொரு கிராமத்திலும் எழலாம்; மக்களுக்கு வாய் இருக்குமானால் ஒவ்வொரு கிராமத்திலும் இதே வகையில் கேட்கலாமென்று எண்ணினேன். எனவே, சிருஷ்டியின் அமைப்பை அல்லது ஆண்டவனின் வேலைமுறையைப்பற்றி எண்ணலானேன். சிருஷ்டியில் அரைகுறையான திட்டமெதுவும் உருவாவதில்லை, எதுவும் பூரணமாய்த்தான் உருப்பெறும். குழந்தை பிறந்ததும் அதன் வயிற்றில் பசிதோன்றுகிறதென்றால், அதே சமயத்தில் தாயின் ஸ்தனத்திலும் பால் சுரக்கிறது. கடவுள் அரைகுறையான ஏற்பாடு எதையும் செய்வதில்லை. குழந்தையின் வயிற்றில் பசியை உண்டாக்கினால், தாய்க்குப் பாலைத்தந்து குழந்தைக்கு அதை அளிக்க வேண்டுமென்ற ஆவலையும் உடன் தருகிறார். எனவே உலகை ஆட்டிவைக்கும் மஹாசக்தியானது இப்பொழுது புதிய காரியமொன்றைச் செய்ய விரும்புகிறது என்று உணர்ந்தேன்.

பிறகு நான் என் மனத்திலேயே இரண்டாவது விஷயமொன்றைப்பற்றி சிந்தித்தேன். அதாவது, "இக்காரியத்தைச் செய்வதற்கு எனக்குச் சக்தியுண்டா?" என்பது,

என் உள்ளம் என் இந்தக்கேள்விக்கு "சக்தியில்லை, நான் சக்தி சூன்யன்" என்று விடையளித்தது. பிறகு நான் "நான் சக்தி சூன்யன் தான். ஆனால் எனக்குக் கடவுள் பக்தியும் நம்பிக்கையும் இல்லையா?" என்று கேட்டுக்கொண்டேன். அப்பொழுது என் உள்ளத்திலிருந்து, "பக்திக்கு, நம்பிக்கைக்குக் குறைவில்லை. அது பூர்ணமாயிருக்கிறது" என்ற உத்தரம் வந்தது. அப்பொழுது என் கையிலிருந்தது 100 ஏக்கர் நிலம்தான். எனக்குக் கணித சாஸ்திரத்தில் ஓரளவு பயிற்சியுண்டாகையால் இந்தியாவின் தேவை எவ்வளவாயிருக்குமென்று மனதிலேயே கணக்கிட்டுப் பார்த்தேன். அப்பொழுது "நீ கணக்குப் போடுவதைப் பார்த்தால் நீ பெரிய முட்டாளாயிருப்பாய் போல் தோன்றுகிறதே! இந்தக் கணக்கு அல்ப சொல்பமானதா? என்று என் உள்ளம் என்னிடம் கூறிற்று. ஆனால் எனது வெகுநாளையப் புள்ளிப் பழக்கம் என்னை விடவில்லை. நான் கணக்குப் போட்டதில், ஐந்துகோடி ஏக்கர் நிலமிருந்தால் இவ்வேலை நிறைவேறும் என்று தெரிந்தது.

பிறகு நான் இன்றைய நிகழ்ச்சியின் பொருளைப் புரிந்துகொள்ளாது போட்டப் புள்ளியைக் கண்டு அஞ்சுவதென்றால் நான் அஹிம்சையில் எனக்குள்ள நம்பிக்கையைத் துறந்து ஹிம்சையை ஏற்றாக வேண்டும், அல்லது நம்பிக்கையை அறவே துறந்துவிட வேண்டுமென்று எண்ணினேன். நான் நம்பிக்கையை இழப்பதற்கோ. ஹிம்சையை ஏற்பதற்கோ சித்தமாயில்லாமையால் ராமனை நினைத்துக்கொண்டு உறங்கிவிட்டேன். மறுநாள் போகவேண்டிய கிராமத்திற்கு போய் பூமிதானத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். நான் அங்கே சென்றது தெலிங்கானாவின் நிலையைக் காண்பதற்கே. பூமிதானத்தைப் பற்றி எனக்கு அப்பொழுது ஒன்றும் தெரியாது. ஆனால் அஹிம்சை அனுஷ்டானத்திற்கு வரவேண்டுமானால் அப்பொழுது எனக்குக் கிடைத்திருந்த சமிக்ஞையை விடாது பற்றிக்கொள்ள வேண்டுமென்று உறுதிகொண்டேன். ராமாவதாரத்தில் குரங்குகளைக் கொண்டே காரியம்

நடந்துவிட்டதென்ருல் நான் குரங்கல்லவே, மனிதனுயிற்றே, அஹிம்சையில் உறுதியுள்ள மனிதனுயிற்றே. மேலும் நான் அந்தக் குரங்குகளிடமும் எவ்வளவோ பக்தி புரிந்திருக்கிறேனே. ஆகையால் அந்தக் குரங்குகள் தாமென்ற, ஆணவ உணர்ச்சி அறவே அற்றிருந்ததைப் போல் நானும் ஆணவத்தைத் துறந்து சூனிய நிலையை எய்திவிடுவேனுயின் அந்தக் குரங்குகளிடம் பணிகொண்ட இராமன் என்னையும் இயக்கி வேலை செய்விப்பானென்று எண்ணினேன்.

## அடுத்த நாள்

எனவே அடுத்தநாள் காலையில் நாங்கள் போய்ச்சேர்ந்த கிராமத்தில் பிள்ளை தன் தந்தையிடம் கேட்பதைப்போல மிகுந்த நம்பிக்கையுடன் கைநீட்டிப் பூமிதானம் கேட்டேன். அப்பொழுது 'இந்த மனிதன் பூமியை தானம் கேட்க வந்திருப்பவனெ'ன்று எவருக்கும் தெரியாது. அவர்கள் பாவம், பூமாலைகள் முதலியவை வாங்கிக்கொண்டு என்னை வரவேற்க வந்திருந்தார்கள். நான் அவர்களிடம், "இந்தப் புஷ்பங்கள் வெகு அழகாயிருக்கின்றன, ஆனுல் இவைகளின் தாய் இவற்றிலும் அழகானது. எனக்குப் பூக்கள் தேவையில்லை அவை ஆண்டவனுக்கு உரியவை. எனக்கு வேண்டியது மண்ணே. எனக்கு அதைக் கொடுங்கள் நான் உங்கள் குழந்தை, நீங்கள் என் தந்தையர் உங்கள் வீட்டில் நான்கு பிள்ளைகலிருந்தால் நான் ஐந்தாமவன். எனக்கு ஐந்தில் ஒரு பகுதி ஒதுக்கிக் கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னேன். அப்பொழுது அங்கே வந்திருந்தவர்களுக்கு நான் இம்மாதிரி ஏதோ கேட்கப் போகிறேனென்றே தெரியாது. அதனுல் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வெடித்தபொழுது ஏற்பட்டது போன்ற விளைவு எனது இந்தப் பேச்சினுல் ஏற்பட்டது. எனக்கு அங்கே 25 ஏக்கர் நிலம் கிடைத்து விட்டது. எனவே இரண்டு புள்ளிகள் அமைந்து விட்டால் இரண்டையும் இணைக்கும் கோடொன்று ஏற்பட்டு விடுமென்று யுகலிட் சொல்லிக் கொடுத்திருந்த சூத்

திரத்தை நினைத்துக்கொண்டேன். நேற்று மாலைக் கூட்டத்தில் 100 ஏக்கர் நிலம் கிடைத்தது. இன்று காலையில் 25 ஏக்கர் கிடைத்துவிட்டால் இரண்டு புள்ளிகள் அமைந்துவிட ஒரு கோடு—நான் செல்வதற்குரிய வழி திட்டமாய் விட்டதென்று எண்ணிக்கொண்டேன்.

இதெல்லாம் நடந்து இப்பொழுது நான்காண்டுகள் கடந்துவிட்டன. நூறு ஏக்கர் என்றிருந்தது ஆயிரம் ஏக்கராக, பிறகு ஆயிரம் லட்சமாகி இப்பொழுது சுமார் 40 லட்சம் ஏக்கர் நிலமாகியுள்ளது. 4½ லட்சம் பேர் தானமளித்துள்ளார்கள். கேட்க வந்த 100 பேர்களில் ஒருவர் தானமளித்திருப்பதாய் உத்தேசக் கணக்கு போட்டாலும் 4½ கோடி மக்களுக்கு பூமிதானச் செய்தி எட்டியிருப்பதாய்க் கொள்ளலாம். பீஹாரில் நமக்கேற்பட்ட அனுபவங்களைக் கண்ணுல் கண்டவர்களுக்கு கலியுகம் கழிந்து சத்தியயுகம் பிறந்துவிட்டதாய்த் தோன்றிற்று. இறுதியில் அங்கே இருந்த நிலைமையைக் கேட்டால் உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஒரு ஜில்லாவில் நடந்த கூட்டத்தில் மக்கள் என்னிடம் வந்து, "எங்கள் ஊருக்கு நிலம்பெற யாருமே வரவில்லை. நாங்கள் அனைவரும் கொடுக்கக்காத்திருக்கொண்டிருக்கிறோம்" என்று புகார் செய்தார்கள். எனவே மக்களின் மனம் இந்த அளவுக்குப் பக்குவம் அடைந்துள்ளது. ஆனல் இவ்வாறு பக்குவம் செய்தது நாமா?

**நான்கு வருஷத்திற்குப் பிறகு**

இவ்வாறு நான்காண்டுகளில் மக்கள் மனம் இவ்வேலைக்குப் பூர்ண பக்குவம் அடைந்துவிட்டது. இந்தியாவில் நாம் நம் முழு சக்தியையும் செலுத்திப் பாடுபடுவோமாயின் இரண்டாண்டுகளுக்குள் அமைதியான முறையில் இந்தியாவின் நிலப் பிரசினை தீர்ந்துபோகுமென்ற என் நம்பிக்கையை ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இதுமட்டுமல்ல, இந்தியா இதற்காகப் பாடுபட்டால் இந்தியாவின் பெரிய பிரசினை

திருவதன்றி உலகெங்கும் அமைதியை நிலை நாட்டலாம் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. இதை உலக மக்களும் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். உலகின் பல் வேறு சிந்தனையாளர்களும் இச் சிறு இயக்கத்தை கவனிக் கிறுர்கள். தொலைவிலுள்ள தேசத்தவர் பலர் யாத்திரை கோஷ்டியில் சேர்ந்து எங்களுடன் சுற்ற வருகிறுர்கள். அவர்கள் பூமிதான வேலையைத் தம் கண்ணுல் காண்பதால் அவர்களுக்கும் தன்னம்பிக்கை பிறக்க "பாபாவின் இப்பணி இங்கே நிறைவேறினல் இதன்மூலம் உலகிலும் அமைதியை நிலவச்செய்ய முடியும்" என்று சொல்லுகிறுர்கள். அவர்கள் என்னை, "இங்கே இது நடப்பதுபோல் எங்கள் நாடுகளிலும் ஐரோப்பாவிலும் நடக்க வியலுமா?" என்று கேட்கிறுர் கள். நான், "ஒவ்வொரு இடத்திலும் பிரத்யேகமான பிரசினைகள் உள்ளன. ஆனல் மக்களின் உள்ளம் உலகெங் கும் ஒரே தன்மையதாகையால் நாங்கள் பின்பற்றும் முறை எங்குமே பயன் அளிக்கும்" என்று அவர்களுக்குச் சொல்லு கிறேன்.

## சம்பூர்ண கிராமம்

நீங்கள் இப்பணியை சம்பூர்ண, சமக்ர நோக்குடன் பார்க்கவேண்டும். சர்வோதயக் கருத்து ஒரு சம்பூர்ணக் கருத்து பூமிதான யக்ஞம் அதற்கு அடிப்படை சர்வோதயத் தில் அனைவரும் சரிநிகர் சமானம். எல்லோரும் சகோதரர் கள். அதைச் சேர்ந்தவர்களிடையே உயர்வு தாழ்வு என்ப தற்கே இடமில்லை. வைஷ்ணவர்கள் தம்மை யெல்லாம் பக்தரென்று, அடியாரென்று எண்ணுவதைப்போல சர்வோ தய பக்தரும் தம்மை அடியாரென்றும் பிறர் அனைவரையும் தம்மிலும் மேலானவரென்றும் எண்ணுகிறுர்கள் சர்வோ தய மென்ருல், எல்லோரும் இன்பமடையட்டும், பிறகு எனக்குக் கிடைத்தால் போதும், எல்லோருக்கும் உணவு கிடைத்தானபிறகு எனக்கும் கிடைத்தால் போதும், என்று எண்ணுவதாகும். சர்வோதயத்தின் நிதரிசனமான உரு,

உதாரணம் நம் வீடுகளிலுள்ள நம் தாயார் ஆகும். சிலர் சர்வோதய தத்துவப் பயிற்சி அளிப்பதற்கு முகாம்கள் நடத்த வேண்டும், கல்லூரிகளில் அதை போதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான், "இது அவசியம் வேண்டியதே. ஆனால் சர்வோதயப் பயிற்சிக்கான பெருத்த திட்டமொன்று ஏற்கனவே அமைந்துள்ளது. சர்வோதயப் பயிற்சியை விநோபா அளித்துப் பெற வேண்டியதில்லை. அதை ஒவ்வொரு தாயும் தம் வீடுகளில் தம் குழந்தைகளுக்கு அளித்து வருகிறார் என்று சொல்லுகிறேன். தாய் தம் குழந்தைகளுக்குப் புகட்டும் பாலுடன் சர்வோதயமும் புகட்டுகிறார். தாய் வீட்டிலுள்ள அனைவருக்கும் உணவருந்திய பின் தாம் உணவருந்துகிறார். தாயின் இந்த நடைமுறையில் சர்வோதயம் பொதிந்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலும் சர்வோதயத்தின் பிரதிநிதி, சர்வோதயத்தின் குரு இருந்து வருகையில் அதில் நமக்குப் புரிந்து கொள்ள வியலாத சூக்ஷ்மம் என்ன இருக்கிறது?

## சுயநலத்திற்கு உயர்ந்த பயிற்சி

ஒரு நண்பர் பாபா அனைவரையும் பரமார்த்திகளாக்க துறவிகளாக்க விரும்புகிறாரென்று எழுதியிருந்தார். மனிதனிடம் பரமார்த்த உணர்ச்சி குறைவாயும் சுயநல உணர்ச்சி அதிகமாயும் இருக்கிறதென்று சொல்லப்படுவதை நான் ஒப்பவில்லை. மனிதனைப் பற்றிய இந்தக் கருத்தே தவறென்பது என் அபிப்பிராயம். சமூகத்திற்காகத் தனது என்பதனைத்தையும் துறப்பதில்தான் மனிதனுடைய நலம் அமைந்திருக்கிறது. மனிதன் எந்த அளவுக்குப் பிறருக்காகத் துறக்கிறானோ, தியாகம் புரிகிறானோ அதே அளவுக்குப் பயன் பெறுகிறான். தாய்க்குத் தம் வீட்டில் கிட்டும் இன்பம் எந்த சுயநலமி அல்லது உலோபிக்குக் கிட்டும்? தாய்மாரிடம், "நீங்கள் சமையலானதும் சாப்பிட்டு விட்டுப் பிறகு குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் உணவளித்தாலென்ன?" என்று கேட்டுப்பாருங்கள். தாய்மார் தம் குழந்தைகளிடம், "நீங்

கள் அனைவரும் என்னை அண்டி, என்னை நம்பி இருப்பதால் என் உடல் வலுவாயிருக்கவேண்டும். எனவே நான் முதலில் பால் அருந்துகிறேன், பிறகு நீங்கள் அருந்துங்க"ளென்று சொல்வார்களானால் தாய்மார் நவீன பொருளாதார விற்பன்னர்களிடம் சீடர்களாகிய இத்தகைய சுயநலப்பாடம் படித்து அனுஷ்டிப்பார்களானால் அவர்களுக்கு அதனால் என்ன இன்பம் ஏற்படும்? இவ்வாறு வீட்டுக்கு வீடு பரமார்த்தத்தின் உதாரணம் நிதரிசனமாய் இருந்து வருகையில், தியாகம் செய்வோருக்கே இன்பம் கிட்டுகிறது என்று நான் அனுபவத்தில் உணருகையில் நான் அதிகமாய் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. "உங்களுக்கு உங்கள் வீட்டிலேயே இன்பம் பெறுவதற்கான முறை போதிக்கப்படுகிறது அதற்கான யுக்தி உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. அதையே தம் தம் கிராமங்களில் உபயோகியுங்கள்" என்று மட்டுமே நான் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் வீட்டில் தம் குழந்தைகளைப்பற்றிக் கவலைப்படுவீர்களேயன்றி தம்மைப்பற்றி அவ்வளவு நினைப்பதில்லை. நீங்கள் தம் வீடுகளில் அனுஷ்டிக்கும் அதே நியாயத்தை கிராமத்திலும் அனுஷ்டித்தால் உங்கள் இன்பம் பெரிதும் பெருகும்.

இந்த விஷயத்தைப் புரிந்துகொள்ளுதல் மிகவும் சுலபம். இதை எழுத்துவாசனை இல்லாதவர்களும் புரிந்து கொண்டு விட்டமையால் கோராபுட் ஜில்லாவில் *350 கிராமத்தில் மக்கள் தம் கிராமங்களனைத்தையும் தானமளித்து விட்டார்கள். சமூகத்திற்கு உண்மையான சுயநலப் பயிற்சி அளிப்பதாய் நான் உரிமையுடன் கூறுகிறேன். இந்தியன் ஒவ்வொருவனுடைய சுயநலமும் அவன் தனது தனி உடைமை — உரிமையைத் துறப்பதில்தான் அடங்கியிருக்கிறது.

**கால்பந்து விளையாட்டு உதாரணம்**

கால்பந்து விளையாட்டு எப்படி நடக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். என்னிடம் பந்து வந்ததும் நான் அதைப்

* இப்பொழுது 609 கிராமங்கள்.

பிடித்து என்னிடமே பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தால் ஆட்டம்தான் நடக்குமா, அதனால் இன்பந்தான் ஏற்படுமா? என்னிடம் பந்து வந்தவுடனே நான் அதை இன்னொருவனிடம் உதைத்துத் தள்ளுகிறேன். அப்பொழுதுதான் ஆட்டம் நடக்கிறது, இன்பம் ஏற்படுகிறது இதே வகையில் நம் கைக்கு வரும் பணத்தை நம்மிடமே கெட்டியாய் வைத்துக் கொண்டிருப்பதில் இன்பமில்லை; அதை சமூகத்திடம் திரும்பச் சேர்ப்பதில்தான் இன்பமிருக்கிறது. உங்களுக்கு ஒரு லாடு கிடைத்து உங்கள் கை, பொருளாதார சாஸ்திரம் பயின்ற வித்வானாகையால் லட்டுவை அது தன்னிடமே மூடி வைத்துக்கொண்டிருந்தால் உணவே இல்லாமற்போய்விடும். ஆனால் அது தன்நலம் அந்த லாடுவை வாயில் போடுவதில் தான் இருக்கிறது என்பதை உணருகிறது. வாய் சுயநலம் காரணமாய் லாடுவை தன்னிடமே வைத்துக்கொண்டிருந்தால் வாயே லாடுவைப் போல உப்பிப்போகுமேயல்லாது அதை உண்ட இன்பம் அதற்கு எவ்வாறு ஏற்படும்? ஆனால் வாய் பரமார்த்த நோக்குடன் லாடுவை வயிற்றினிடம் சேர்த்து விடுகிறது. வயிறும் சுயநலமியாக லாடுவை கெட்டியாய்ப் பற்றிக்கொண்டிருந்து விடுமாயின் வயிறு உப்பிப் போய் சஸ்திர சிகிச்சை செய்யவேண்டிவரும். ஆனால் வயிறோ அதை வைத்துக்கொண்டு பெரிதும் உழைத்து ரத்தமாக்கி உடலெங்கும் அனுப்பி விடுகிறது

இதே வகையில் பிறரைப்பற்றியே ஓயாது சிந்திப்போர் அடங்கியதே உயிருள்ள சமூகம். கையிடம் வந்த லாடுவை அது உடனே வாயில்போட்டு விடுவதைப்போல தமக்குக் கிடைத்த செல்வத்தை, பொருளை பிறரிடம் அனுப்பி விடுவோரைக்கொண்ட சமூகமே உயிருள்ள சமூகம். நிலத்தையும் மற்ற செல்வத்தையும் தம்மிடமே கெட்டியாய்ப் பிடித்து வைத்துக்கொண்டிருப்போர் உள்ள சமூகம் உயிரற்ற சமூகமே. ஒரு சமயம் ஒரு பையன் என்னிடம் வந்து காது நோகிறதென்று சொல்லி அழுதான். நான் குசும்புக்காரனாகையால் அவனிடம் " தம்பி காதல்லவோ நோகிறது?

கண்ணில் நீர் வடிவானேன்? கண் அழுவானேன்?" என்று கேட்டேன். ஆனால் காதின் நோவு கண்ணையும் அடைகிறது. இதுவே உயிருள்ள உடலுக்கு அறிகுறி. ஒருவன் காதில் ஒரு முளையை வைத்து அடித்தாலும் கண்ணிலிருந்து துளி நீர் வரவில்லை யென்றால் அந்த உடலில் உயிரில்லை, அது பிணமென்று அறியவேண்டும். இதே வகையில் ஒரு கிராமத்தில் ஒரு வீட்டாருக்கு நேர்ந்த துன்பம் அண்டை அயலாரைப் பாதிக்கவில்லை யென்றால் அந்த கிராம சமூகத்திற்கு உயிரில்லையென்று உணரவேண்டியதே.

### வினோபாவைக் காணவே பயம்!

இது மிகவும் சாதாரண விஷயமாகையால் இதை எல்லோரும் புரிந்துகொள்ளுகிறார்கள். சில பெரிய மனிதர்கள் பாபாவை அணுகவே அஞ்சுகிறார்கள். ஒரு சமயம் ஒரு பெரிய மிராசுதாரிடம், "நம் ஊருக்கு பாபா வந்திருக்கிறாரே, போய்ப் பார்த்துவிட்டு வரலாம் வாருங்கள்" என்று ஒருவர் சொன்னார். அதற்கு அந்த மிராசுதார் "எனக்கு பாபாவிடம் பெருமதிப்புண்டு. நான் அவருடைய நூல்களைப் படித்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது எனக்கு அவரைப் பார்க்க விருப்பமில்லை" என்று பதில் சொன்னாராம். "ஏன்?" என்று கேட்டதற்கு, "பார்க்கப் போனால் அவர் நிலம் கொண்டாவென்பார். அவர் கேட்டுவிட்டால் என்னால் இல்லை யென்று சொல்ல முடியாது" என்று பதில் வந்தது. அதற்கு அழைத்தவர் "அவர் கேட்டால் கொடுத்துத்தான் தீரவேண்டுமா? உங்களுக்கு விருப்பமில்லை யென்றால் கொடுக்க வேண்டாமே. அவர் சொல்லுவதை காதில் வாங்கிக்கொண்டு வந்துவிடுமே. நிர்ப்பந்தம் செய்து நம் நிலத்தைப் பெறுவதற்கு அவருக்கு அதிகாரமேது? அன்புடன் விரும்பிக் கொடுப்பதைத்தானே அவர் வாங்கிக்கொள்ளுகிறார்.' என்று சொன்னார். அப்பொழுது மிராசுதார், "இதில் தானே ஆபத்திருக்கிறது. அவர் அன்பாய்க் கேட்கிறார். அவர் சொல்லுவதெல்லாம் உண்மையாயிருக்கிறது. அதனால்தான் என்னால் அதை

மறுக்க முடியாதே என்று அஞ்சுகிறேன்'' என்று சொன்னார். என்னிடம் இந்தச் செய்தி வந்தபொழுது நான், "எனக்கு அவருடைய நிலம் கிடைத்து விட்டது. அவர் என் வார்த்தையை ஏற்றுக்கொண்டு விட்டாரல்லவா? அதற்குமேல் எனக்கு வேறெதுவும் தேவையில்லை'' யென்று சொன்னேன். இந்தியாவின் மக்களனைவரும் பாபா சொல்லுவதை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு விட்டார்களெனின் அதன் பிறகு பாபாவுக்கு ஒரு ஏக்கர் நிலமும் வேண்டியதில்லை. அப்பொழுது நிலத்தை வாங்கிப் பிறகு அதை விநியோகிக்கும் சிரமம் எனக்கேது? என்னை ஆட்டி அலைக்கழிக்கும் கருத்து உங்கள் உள்ளங்களிலும் இடம் பெற்றுவிடுமாயின் அது உங்களை அமைதியாய் இருக்க விடாது; ஆட்டி அலைக்கழிக்கும்.

## ஒரு முஸ்லீம் அன்பரின் தானம்

ஒருசமயம் ஒரு முஸ்லிம் மிராசுதார் என்னைக் காண வந்தார். நான் அவரிடம், "நீங்கள் ஐந்துபேர் சகோதரர்களென்றால் எனக்கு ஆறில் ஒரு பகுதி உங்கள் நிலத்தில் அளியுங்கள்') என்று சொன்னேன். அதற்கு அவர், "ஆண்டவன் அருளால் நாங்கள் ஐவரே'' என்றார். அதற்கு நான், "ஆண்டவன் ஏவலால் நான் உங்கள் ஆறுவது சகோதரனாகிவிட்டமையால் எனக்கு ஆறில் ஒரு பகுதி வேண்டும்'' என்றேன். அவர் கெட்டிக்காரர் "முஸ்லிம்களாகிய எங்களிடையே சகோதரர்களைப் போலவே சகோதரிகளுக்கும் சொத்தில் சம உரிமையுண்டே'' என்றார். அவர் இதைச் சொன்னவுடனே அவர் என் உரிமையை ஏற்றுக்கொண்டுவிட்டாராகையால் எனக்கு வெற்றிதானென்று உணர்ந்தேன். பிறகு, "உங்களுக்கு எத்தனை சகோதரிகள்?'' என்று நான் கேட்கவே, "இருவர்'' என்றார் அவர். அப்பொழுது நான், "ஐந்து சகோதரர்கள், இரு சகோதரிகள் சேர்ந்து ஏழாயிற்று. நான் எட்டாமவன். எனக்கு அரைக்கால் பங்கு கொடுத்து விடுங்கள்'' என்றேன். அவர் உடனே அரைக்கால் பங்கு கொடுத்து

விட்டார். இம்மாதிரியான நிகழ்ச்சிகளை யெல்லாம் நான் உங்களுக்கு சொல்வதென்றால் அது ஒரு பாரதமாகிவிடும். இம்மாதிரியான ஆயிரக் கணக்கான நிகழ்ச்சிகளை இந்த என் கண்கள் கண்டிருக்கின்றன. இதுவரை 4½ லட்சம் பேர் தானமளித்திருக்கிறார்கள். தான மளித்தவர்களுள் கண்ணே தெரியாத குருடரும் உண்டு. ஒரு சகோதரி தானம் வழங்க இரவில் வெகுநேரம் தாழ்த்தி வந்து சேர்ந்தார். அதற்கு முன் நாங்கள் தூங்கப் போய்விடவே அவர் இரவை அங்கேயே கழித்துவிட்டு மறுநாள் காலையில் தானமளித்தபின் விடைபெற்றுச் சென்றார். சிறுபிள்ளைகளும் தம் தந்தையரை வற்புறுத்தி தானம் வழங்கச் செய்திருக்கிறார்கள்.

**நாம் உலக சக்தியின் கருவி**

சகோதரர்களே, இவற்றிலிருந்தெல்லாம் நாம் அறிவதென்ன? உலகின் சக்தி ஏதோ பெரிய காரியமொன்றை நிறைவேற்ற விரும்பியுள்ளது. நாம் அந்த உலக மகா சக்தியின் கருவிகளே, கிருஷ்ணபகவான் கீதையில் அர்ஜுனனிடம், "இவர்கள் அனைவரும் என்னால் ஏற்கனவே மடிந்துவிட்டார்கள் நீயொரு வியாஜமாயிருந்து என் ஏவலைச்செய்" என்று சொல்லுகிறார் இவ்வாறே நான் உங்களிடம், இந்தியாவில் நிலத்தில் மக்களின் உடைமை மரித்துப் போய்விட்டது. இப்பொழுது முன்வந்து தானம் வழங்குகிறவர்கள் தாராள மனமுள்ளவர்களென்று ஆகும். இவர்கள் உலக சக்தியின் கருவியாக ஆவார்கள், நன்மை பயக்கும் ஆயுதமாவார்கள். பகவான் கையில் சொலித்துக்கொண்டிருக்கும் சுதரிசன சக்கரம் போன்றவர்கள் இவர்கள். இல்லையேல் இந்தக் காங்கிரஸ்காரர்களெல்லாம் எதற்காக என்னை அணுகுகிறார்கள்? அவர்களுக்கு பாபாவிடமிருந்து நாலணு சந்தாவாவது கிடைத்திருக்குமென்று எண்ணுகிறீர்களா? மணலைப் பிழிந்து எண்ணை எடுத்தாலும் எடுக்கலாமே தவிர பாபாவிடமிருந்து நாலணு வாங்கிவிட முடியாது. ஆனால் பாபா சொல்லுவது உண்மையாகையால் அதை யாரும் மீற

முடியாதிருக்கிறது. பாபாவுக்கு உலக மகாசக்தியின் மீது, ஆத்ம சக்தியின்மீது, கடவுளின் சக்தியின் மீது—அதை நீங்கள் எந்தப் பெயரால் வேண்டுமோ அழைத்துக் கொள்ளுங்கள் —நம்பிக்கை இருக்கிறது.

**என் பணி சமமாக்குவதே**

ஒரு விஷயம் நினைவிலிருக்கவேண்டும், நாம் ஏற்றுள்ள பணி எவரையும் எதிர்ப்பதற்காகவல்ல. 'சர்வேஷாம் அபிரோதேன பிர்ம கர்ம ஸமாரபே' (பிர்ம்மகர்மம் அல்லது கடவுளின் பணி எவரையும் எதிர்த்துத் தோன்றுது.) நாம் ஏற்றுள்ளது கடவுள் பணியாகையால் இதில் எவரையும் நாம் எதிர்க்கவில்லை. இதில் அனைவரின் நன்மையும் பொருந்தியிருக்கிறது இதில் ஒவ்வொருவர் மனத்தையும் மற்றவர் மனங்களுடன் இணைக்கும் முயற்சியுள்ளது. ஆகையால் இதில் எல்லா அரசியல் கட்சியினரும் கலந்து கொள்வார்களென்பது என் நம்பிக்கை. மக்களனைவரின் நன்மைக்காகவே இவ்வேலை நடக்கிறதென்று எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு இடத்தில் கம்யூனிஸ்டுகள் பாபா செய்யும் இந்த வேலை பணக்காரர்களின் நன்மைக்காக நடக்கிறதென்று சொன்னார்கள் இது நடந்தது மூன்று வருஷங்களுக்கு முன்பாகும். இப்பொழுதோ கம்யூனிஸ்டுகளின் மனமும் நமக்குச் சாதகமாய் மாறியுள்ளது. நாம் ஏழைகளுக்காக வேலை செய்வதால் அனைவரின் மனமும் நமக்கு அனுகூலமாயிருக்குமென்று நான் முதலிலிருந்தே சொல்லிவந்தவன், ஆனால் பாபா பணக்காரர்களின் ஏஜென்ட் என்ற இந்தப் புதிய குற்றச்சாட்டு என் காதில் விழவே எனக்குப் பெருமகிழ்ச்சியுண்டாயிற்று. ஆனால் நான் எத்தகைய ஏஜென்ட்? இந்த ஏஜெண்டின் ஒரு கையில் பணக்காரர்களின் நன்மையிருந்தால் மறு கையில் அவன் ஏழைகளின் நன்மையையும் வைத்திருக்கிறுன். இவன் இருவரையும் இணைக்கும் பாலம் போன்றவன். பாலம் இக்கரையிலுள்ளவர்களை அக்கரையிலும் அக்கரையிலுள்ளவர்களை இக்கரையிலும் கொண்டு

சேர்ப்பதைப் போல பாபா ஏழைகளைத் தனவான்களாகவும் பொருள் படைத்தவர்களை எளியோராகவும் செய்வான். இருவரையும் ஒரே தளத்தில் கொணர்ந்து நிறுத்தி பரஸ்பரம் அன்புகொள்ளச் செய்து தான் புரோகிதனுயிருந்து இருவருக்கும் மணம் முடித்து வைத்துவிட்டு அவன் நடையைக் கட்டிவிடுவான். பிறகு அவன் அவர்களிடம் இனி நீங்கள் அன்புடன் உங்கள் காரியங்களை நடத்திக்கொண்டு போங்களென்று சொல்லுவான். இவ்வாறு இந்த இயக்கம் மக்களின் மனத்தை இணைப்பதற்கெனத் தோன்றியதாகும்.

### எனது என்ற பற்றை விடுங்கள்

இந்தியா மிகவும் பெரிய தேசம். இதன் சக்தி ஒற்றுமையிலேயே அமைந்திருக்கிறது. நாம் முழுமனதுடன் ஒன்று சேர்ந்து விடுவோமாயின் நம் சக்தி பெரிதும் வளர நம்மை யாரும் அசைக்க முடியாத நிலையை எய்துவோம். ஆனால் நம் மனம் ஒன்று சேராவிடில் நம் ஜனத்தொகையின் பெருக்கமும் நிலத்தின் பெரும் பரப்புமே நமக்கு யமனாகிவிடும். நான் பணக்காரர்களிடம் நிலம் பெறுகிறேனென்றால் அவர்களுக்கு உதவுவதாகவும் பெற்ற நிலத்தை எளியோருக்கு வழங்கும்பொழுது அவர்களுக்கு உதவுவதாகவும் எண்ணுகிறேன். ஏழைக்கும் தன் கையகலக் கோவணத்தில் பற்றுண்டு. உடைமை உணர்ச்சி அவனுக்கும் இல்லாமலில்லை. இதனால் நான் ஏழை எளியோரிடமும் நீங்கள் உங்கள் குடிசைகளிடம் கொண்டுள்ள பற்றைத் துறந்துவிடுங்களென்கிறேன். தனவான்களும் தம் மாட மாளிகைகளிடம் கொண்டுள்ள பற்றை விடவேண்டி வரும். ஆனால் ஏழைகளாகிய நீங்கள் உங்கள் குடிசைகளின் பற்றைவிட மறுத்தால் அவர்களும் தம் மாளிகைகளைப் பற்றிக்கொண்டு தானிருப்பார்கள். ஏழை, பணக்காரரென்று இரண்டு இனங்கள் இல்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. தன் உடைமையென்று ஒன்றைக்கொண்டு விடாப்பிடியாய் அதைப் பற்றிக்கொண்டிருப்

பவர் — பெரியவர்களோ சிறியவர்களோ பணக்காரரோ ஏழையோ—அனைவரும் ஒரே இனத்தவரே.

கடவுள் காற்றையும் நீரையும் சூரிய வெளிச்சத்தையும் அனைவருக்குமென உண்டாக்கியிருப்பதைப் போல நிலத்தையும் எல்லோருக்குமென்றே சிருஷ்டித்திருக்கிறார் என்று நான் சொல்லுகிறேன். எனக்கு நல்ல காற்று கிடைக்கிறது; அதனால் உங்களுக்கும் ஒன்றும் கேடு நேருவதில்லை. உங்களுக்கு நல்ல காற்று கிடைப்பதனாலும் எனக்குக் கேடில்லை. ஆனால் ஒருவருக்கு நல்ல காற்று கிடைக்கும் காரணத்தால் இன்னொருவன் தீயகாற்றில் இருக்க நேர்ந்தாலும் ஒருவனுக்கு நல்ல நீர் கிடைக்கவேண்டி இன்னொருவன் அழுக்கு நீரைப் பருக நேர்ந்தாலும் பேராபத்தாய் விடும். ஆகையால் சிருஷ்டியிலுள்ள சக்திகளனைத்தும் அனைவருக்குமென அமைந்தவை யாகையால் அதற்கேற்ப நாம் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

மறுபடியும் ஆந்திரம் வருவேன். இவ்விரண்டு மாதங்களுள் நீங்களனைவரும் ஒன்று சேர்ந்து பூமிதானப் பணியில் முனைந்து இறங்கி இந்த கோவர்த்தன மலையைத் தூக்க வேண்டுமென்பது என் விருப்பம். கோவர்த்தன மலையைத் தூக்குகிறவன் தூக்கப்போகிறான், நாம் தூக்கப்போவதில்லை. ஆனால் நம் அனைவரின் கோல்களும் அதைத் தாங்கும் பொழுதுதான் கிருஷ்ண பகவான் அதைத் தூக்கிப் பிடிப்பார். ஆகையால் ஆந்திர தேசத்தில் பூமிதான யக்ஞத்திற்கு நிலமளிக்காதவர்களோ சம்பத்து தான யக்ஞத்திற்குப் பொருள் தராதவர்களோ எவரும் இருக்கலாகாது என்பது என் விருப்பம். உங்களிடமிருந்து தொடங்கி, அண்டை அயலில் உள்ளவர்களை அன்புடன் அணுகிக் கேட்பீர்களாயின் அவர்கள் கொடுத்துக்கொண்டு வருவார்கள். யாரையும் எவ்வகையிலும் நிர்ப்பந்தப்படுத்தத் தேவையில்லை. நிர்ப்பந்தம் அறவே கூடாது. இனிமையுள்ளதும் நல்ல விளைவுள்ளதுமான பொருளைப்பற்றி நாம் மக்களுக்கு விளக்கி மட்டும்

சொல்லுவோமாயின் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளு கிறார்கள்.

சர்வோதய நூல்களை நீங்கள் அனைவரும் படிக்கவேண்டு மென்பது என் விருப்பம். சர்வோதய தத்துவங்களை நீங்கள் நன்கு சிந்திக்கவும் ஆராயவும் வேண்டும். ஒவ்வொரு நகரி லும் கிராமத்திலும் படிக்கவும், படித்து விளக்கவும் ஏற்பாடு இருக்கவேண்டும்.

---

## வழிநடைப் பாட்டு

---

1 பூமிதானம் செய்வதே புண்ணியத்திற் புண்ணியம்;
புனிதமான முறையில் நாட்டின் வறுமைபோகப் பண்ணி
சாமிசாட்சி யாகயெங்கும் சண்டைகள் குறைந்திடும்; [டும்;
சரிநிகர் சமானவாழ்வு சத்தியம் நிறைந்திடும் (பூமி)

2 ஏழையென்றும் செல்வனென்றும் ஏற்றத்தாழ்வு
போய்விடும்;
எங்கும்யாரும் பகைமையின்றி பங்குகொள்வ தாய்விடும்;
கோழையின் பொறுமைதாண்டும் குற்றம்யாவும் நீங்கிடும்;
கொடுமையான பஞ்சம்விட்டு குணநலங்கள் ஓங்கிடும் (பூமி)

3 உடலுழைத்து உணவுமுற்றும் உண்டுபண்ணும் உழவர்கள்
உரிமை சொல்ல நிலமில்லாமல் உள்ளம்வெந்து அழுவதா?
உடல்சுகித்து உலகினுக் குதவியற்ற ஒருசிலர்
ஊரிலுள்ள பூமிமுற்றும் உரிமைகொண்டு திரிவதா? (பூமி)

78092

வெற்றிவேல் பிரஸ், தெற்கலங்கம், தஞ்சாவூர்.

# அகில இந்தியாவில் பூதானம்

## 1955 செப்டம்பர் 15வ. வரையில் கிடைத்த நிலமும், வினியோகித்ததும்

| மாகாணம் | கிடைத்த நிலம் ஏகரா | தான பத்திரம் எண் | வினியோகித்த நிலம் ஏகரா | நிலம் அடைந்த குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| பீஹார் ... | 23,59,879 | 2,95,790 | 34,809 | 19,062 |
| உத்திரபிரதேசம் ... | 5,53,640 | 20,940 | 65,658 | 31,190 |
| இராஜஸ்தான் ... | 3,59,226 | 74,803 | 14,514 | 2,292 |
| உத்கல் ... | 2,09,681 | 81,813 | 13,210 | 1,732 |
| மத்திய பிரதேசம் ... | 1,16,617 | 24,638 | 37,082 | 6,418 |
| ஹைதராபாத் ... | 1.09,529 | 4,286 | 33,674 | 7,379 |
| மத்திய பாரத் ... | 51,987 | 5,014 | 311 | ... |
| தமிழ் நாடு ... | 42,073 | 10,751 | 585 | 221 |
| சௌராஷ்டிரா ... | 41,000 | 15,000 | 1,500 | ... |
| குஜராத் ... | 39,240 | 8,877 | 6,400 | 2,351 |
| மகாராஷ்டிரா ... | 28,146 | 6.193 | ... | ... |
| கேரளா ... | 25,113 | 1,200 | 315 | ... |
| ஆந்திரா ... | 22,372 | ... | ... | ... |
| பஞ்சாப்—பெப்சு ... | 14,386 | 3,297 | 653 | 161 |
| வங்காளம் ... | 10,596 | 5,641 | 1,363 | 1,158 |
| டில்லி ... | 9,245 | 249 | 90 | 25 |
| மைசூர் ... | 7,796 | 3,005 | ... | ... |
| விந்திய பிரதேசம் ... | 6.883 | 1,470 | 771 | 278 |
| கர்நாடகம் ... | 3,122 | 620 | 269 | 85 |
| ஹிமாசல பிரதேசம் ... | 2,025 | 66 | ... | ... |
| அஸ்ஸாம் ... | 1,950 | ... | ... | ... |
| பம்பாய் ... | 123 | 6 | ... | ... |
| மொத்தம் ... | 40,14,629 | 5,63,659 | 2,11,204 | 72,352 |

கிராமதானமாகக் கிடைத்துள்ள முழு கிராமங்கள் 600.

## எமது காந்தீய - சர்வோதய இலக்கியம்

### மகாத்மாகாந்தி எழுதியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| சர்வோதயம் ... ... ... | 0 | 5 |
| ஆசிரம வாழ்க்கை ... .... | 1 | 4 |
| ராம நாமம் ... ... .... | 0 | 12 |
| நீதி தர்மம் .... ... ... | 0 | 4 |
| சமூகத்தில் ஸ்திரிகளின் ஸ்தானம் ... .... | 0 | 4 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் ... ... | 1 | 0 |
| ராட்டை தத்துவ விளக்கம் ... .... | 1 | 4 |
| ஆசிரம பஜனாவளி .... .... | 0 | 6 |
| காந்திஜியின் சுயசரிதம் — சுருக்கம் ... | 2 | 0 |
| கீதாபோதனை ... ... ... | 0 | 12 |

### கஸ்தூர்பாவின் சரித்திரம்

| | | |
|---|---|---|
| எமது பா : வனமாலா பரீக் ... .... | 1 | 4 |
| எமது பா : சுசீலா நய்யர் ... ... | 1 | 4 |

### காந்திஜியைப் பற்றியவை

| | | |
|---|---|---|
| காந்திக் காட்சிகள் ... .... | 1 | 4 |
| பாபு என் தாய் : மனு காந்தி .... .... | 0 | 12 |
| பாப்பாவின் காந்தி : ஜுகத்ராம் தவே ... | 0 | 12 |

### வினோபாஜியின் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| கீதைப் பேருரைகள் ... .. | 1 | 0 |
| ஹைதராபாத் பிரசங்கங்கள் .... ... | 0 | 6 |
| வீரபாண்டி பிரசங்கம் ... ... | 0 | 8 |
| காந்திஜியின் குரல் ... .... | 0 | 6 |

### தத்துவ நூல்கள்

| | | |
|---|---|---|
| காந்தியும் மார்க்ஸும் : மஷ்ருவாலா எழுதியது: வினோபாஜியின் முன்னுரையுடன் ... | 1 | 4 |
| காந்திய நவநீதம் : கிஷோர்லால் மஷ்ருவாலா எழுதியது ... | 2 | 0 |


பூதான — சர்வோதய கருத்துப் புரட்சிக்கு

**★ சர்வோதயம் ★**

மாதப் பத்திரிகை-9ம் ஆண்டு — வருஷ சந்தா ரூ. **3**

இதர விபரங்களுக்கு :—

**சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்.**



வெற்றிவேல் பிரஸ், தெற்கலங்கம், தஞ்சாவூர்.